காஞ்சிபுரம் கூட்டுறவு நூற்பாலை.

*வினா எண் 58— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் காமட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை தற்போது நஷ்டத்தில் நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இதனைச் சரிசெய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10-10]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டுள்ள ஆடிட் ரிப்போர்டின்படி அந்த மில் 65 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் நடக்கிறது என்று அறிகிறேன். அந்த நஷ்டத்திற்கு அல்லது அந்த மில் சரியாக நடக்காததற்கு காரணகர்த்தா யார்? அவர் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நஷ்டத்திற்கு தனிப் பட்ட நபர் யாரும் பொறுப்பல்ல. 1974 ஆம் ஆண்டி லிருந்தே ஒரு மந்த நிலை ஏற்பட்டிருந்தது. 1975 முதல் 1977 வரையில் பஞ்சின் விலை அதிகமாக இருந்ததாலும், விற்கும் நூலின் விலை குறைந்ததாக சமநிலையில் இல்லாமல் இருந்தது. ஆகவே இந்த இடைப்பட்ட காலத்தில் அந்த மில் நஷ்டத்தில் இயங்கியது. 1978-லிருந்து நூலின் விலை அதிகமாக இருந்தது, லாபம் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கூட்டுறவு நூற்பாலையில் 1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதி முதல் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30 ஆம் தேதி வரையில் 8.54 லட்சம் நிகர லாபம் கிடைத்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் ஏற்கனவே 54.40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருந்தது. இப்போது லாபகரமாக இருந்தாலும், முன்னாலே ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்து கொண்டு வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலையில் மொத்தம் எத்தனை பிரேம்கள் வேலை செய்யவேண்டும்? குறைவாக வேலை செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

1981 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவேண்டும்.

பெரம்பூர் தொகுதியிலுள்ள இறைச்சிக் கூடம்

*வினா எண் 59—திரு. சு. பாலன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பெரம்பூர் தொகுதியில் உள்ள ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கூடத்தினை நவீன முறையில் சீர்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இல்லை. சென்னை பெரம்பூரில் உள்ள பழைய இறைச்சிக் கூடத்திற்குப் பதிலாக மாதவரத்தில் ஒரு நவீன இறைச்சிக்கூடம் அமைப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுசம்பந்தமாக தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் நவீன இறைச்சிக் கூடத்தை அமைக்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பெரம்பூரில் உள்ள அந்த ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கூடத்தில் தினந்தோறும் எவ்வளவு ஆடு, மாடுகள் வெட்டப்படுகின்றன என்பதையும் அதே நேரத்தில் அறுவைக்கு அனுமதிக்கப்படுகின்ற ஆடு மாடுகளுக்கு மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் வெட்டப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த எண்ணிக்கையின் குறிப்பு என்னிடம் இப்போது இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பசுவதைத் தடைச் சட்டம் கொண்டுவரப்போவதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்பு சொன்னார்கள். தமிழ்நாடு பூராவிலும் உள்ள மாடுகள் இறைச்சிக்காக கேரளா போன்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி இறைச்சிக் கூடத்தைச் சீர்படுத்துவது பற்றியதாகும். இதற்கும் கேரள மாநிலத்திற்கு மாடுகள் போவதற்கும் என்ன சம்பந்தம்? மூலக்கேள்வியை ஒட்டியதல்ல.